**இந்திய வானிலைத் துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்**

**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை**

## மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை –16.08.2017

### மாநிலத்தின் கடந்தவாரவானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 28°செ முதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 28°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 17°செ முதல் 21°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 11°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

### 1. மேற்கு மண்டலம்

மேற்கு மண்டலப் பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான கோயமுத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கும் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 30°செ முதல் 32°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22°செ முதல் 24°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 90 முதல் 95 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 80 முதல் 85 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8-10 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரை

- ✓ பெறக்கூடிய மழையைப் பயன்படுத்தி மானாவாரியில் தீவனச்சோளம் அல்லது தட்டப்பயிர் விதைப்பு மேற்கொள்ளலாம்.
- ✓ மழை எதிர்பார்க்கப்படுவதால் பார் மற்றும் சாலில் தக்காளி நாற்றுகளை நடவு செய்வதன் மூலம் தண்ணீர் தேக்கத்தை தடுத்து தக்காளி பயிர் அழுகலை குறைக்கலாம்.
- ✓ மாடுகளை குளக்கரைகளில் புதிதாக முளைத்த தாவரங்களை மேய்ச்சலுக்கு விட வேண்டாம். இதனால் வரக்கூடிய துள்ளுமாறி நோயைத் தவிர்க்கலாம்.
- ✓ மழை எதிர்பார்க்கபடுவதால் நீர் பாசனத்தை தள்ளிப்போடவும்.
- ✓ காற்றின் ஈரப்பதம் அதிகமாக காணப்படுவதால் நிலக்கடலையில் டிக்கா இலைப்புள்ளி நோய் வர வாய்ப்புள்ளது. விவசாயிகள் வயலை நன்கு கண்காணித்து தாக்குதல் காணப்பட்டால் ஒரு எக்டருக்கு கார்பன்டெசிம் 500கி அல்லது மான்கோசெப் 1000கி என்றளவில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தவும்.

### 2. காவிரி டெல்டா மண்டலம்

காவேரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல் நேர வெப்பநிலையானது 34°செ முதல் 38°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செமுதல் 28°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 65 முதல் 88 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் 4 முதல் 10 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### வேளாண் அறிவுரை

- ✓ குறுவை நெற்பயிரில் தூர்கட்டும் பருவத்தில், 1 ஏக்கருக்கு தழைச்சத்து உரமான 25 கிலோ யூரியாவையும், சாம்பல் சத்து உரமான 10 கிலோ முரியேட் ஆப் பொட்டாஷ் உரத்தினையும் கலந்து வயலில் சீராக தண்ணீர் வைத்து தூவவும்.
- ✓ முன்பட்ட சம்பாவிற்கு சி.ஆர். 1009 மற்றும் ஆடுதுறை 50 என்ற இரகங்களை நாற்று விட சிபாரிசு செய்யப்படுகிறது.

- ✓ சம்பா வயல்களில் நேரடிவிதைப்பு செய்யும் பொழுது டிராக்டர் மூலம் இயங்கும் விதைக்கும் கருவிக்கு ஏக்கருக்கு 15 கிலோ மற்றும் ஆட்கள் கொண்டு தெளிக்கும் பொழுது ஏக்கருக்கு 30 கிலோ விதை அளவும் பரிந்துரைக்கப்படுகிறது. விதைப்பதற்கு முன் விதைகளை சூடோமோனாஸ் என்ற எதிர் உயிரியினை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்து விதைக்கவும். இதனால் விதைகளின் முளைப்புத்திறன் மற்றும் வீரிய தன்மை அதிகரிக்கும். விதைகள் மூலம் பரவக்கூடிய நோய் கிருமிகள் அழிந்து விடும்.
- ✓ காவிரி டெல்டா மாவட்டங்களில் எதிர் வரும் மிதமான மழையை பயன்படுத்தி சம்பா சாகுபடி செய்ய உள்ள நிலத்தினை உழுது தயார்படுத்தவும்
- ✓ கோழிபண்ணைகளில் அடர்த்தியான ஈரப்பதத்துடனும் கூடிய ஆழ்கூளம் அதிக வெப்பத்தை வெளிப்படுத்தும். ஆகவே ஆழ்கூளம் 6 செ.மீ-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

### 3. தெற்கு மண்டலம் -1

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி மாவட்டங்களில் வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது 30°செ முதல் 38°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 28°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலை நேரகாற்றின் ஈரப்பதம் 40 முதல் 85 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 2 முதல் 16 கி.மீ வேகத்தில் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### வேளாண் அறிவுரை

- ✓ வரும் தினங்களில் அதிகமான மேகமூட்டம் மற்றும் மிதமானது முதல் அதிகமான மழை எதிர்பார்க்கப்படுவதால் பயிர் நிலங்களில் வடிகால் வசதி செய்யவும்.
- ✓ வரும் தினங்களில் மழை எதிர்பார்க்கப்படுவதால் பயிர் பாதுகாப்பு மருந்துகள் தெளிப்பதை தள்ளிப்போடவும்.
- ✓ வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் வானிலையில் இலேசான மற்றும் மிதமான மேகமூட்டம் எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வானிலையில் தத்துப்பூச்சி மற்றும் வெள்ளை ஈயின் தாக்குதல் தென்பட வாய்ப்புள்ளது. இதனை கட்டுப்படுத்த துத்தி, சுண்டைக்காய், சூரியவர்த்தி போன்ற களைச்செடிகளை களைந்து அழிக்கவும் அல்லது இமிடாகுளோபிரிட் 100 மி.லி./ எக்டர் என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்தவும்.
- ✓ தற்பொழுது நிலவும் வானிலையில் கத்தரியில் தண்டு மற்றும் காய்த்துளைப்பானின் தாக்குதல் தென்பட வாய்ப்புள்ளது. இதனை கட்டுப்படுத்த குயினால்பாஸ் 25 இசி 2 மி.லி./ லி + வேப்பஎண்ணெய் 3 சதத்தை 15 நாட்கள் இடைவெளியில் தெளித்து கட்டுப்படுத்தலாம்.
- ✓ வரும் தினங்களில் காணப்படும் மிதமான மேகமூட்டம், இலேசான மழை மற்றும் மிதமான ஈரப்பதம் கொண்ட வானிலையில் வெண்டையில் தண்டுத்துளைப்பான் மற்றும் காய்ப்புழுவை கட்டுப்படுத்த
  - இனக்கவர்ச்சி பொறி எக்டருக்கு 12 என்ற அளவில் வைக்கவும்
  - பாதிக்கப்பட்ட காய்களை சேகரித்து அழிக்கவும்.
  - அசாடிராக்டின் 0.03% WE (300 பிபிஎம்) 5 கிராம்/ லிட்டர் அல்லது அசாடிராக்டின் 5% அல்லது
  - வேப்பங்கொட்டை சாறு 5 மி.லி., 10 லிட்டர் தண்ணீர் கலந்து தெளிக்கவும்.

### தெற்கு மண்டலம் -2

வரும் நாட்களில் மதுரை, சிவகங்கை, தேனி, புதுக்கோட்டை, திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது தேனி மாவட்டத்தில் மட்டும் 27°செ முதல் 28°செ, மற்ற மாவட்டங்களில் 33°செ முதல் 38°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலையானது தேனி மாவட்டத்தில் மட்டும் 19°செ ஆகவும், மற்ற மாவட்டங்களில் 23°செ முதல் 25°செஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 50 முதல் 90 சதவிகிமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 4 முதல் 10 கி.மீ வேகத்தில் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ தற்போது நிலவும் சூழ்நிலையில் சோளப்பயிர் சாகுபடியில் விதைநேர்த்தி செய்வது முக்கியமானதாகும். சோள விதைகளை விதைப்பதற்கு 24 மணி நேரத்திற்கு முன் ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் கார்பண்டாசிம் அல்லது கேப்டான் அல்லது திரம் கொண்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும். மேலும் நாற்றாங்காலில் விதைப்பதற்கு முன் 1 எக்டருக்கு 3 பொட்டலம் அசோஸ்பைரில்லம் (600 கிராம்) மற்றும் 3 பொட்டலம் அசோபாஸ் (1200 கிராம்) கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும்.
- ✓ தற்போது நிலவும் பருவநிலையில் ஆடுகளை தாக்கும் துள்ளுமாரி நோய் பரவலாக தென்படுகின்றது. எல்லா வயது ஆடுகளையும் பாதிக்கும் ஆனால் இளம் வயது ஆடுகளே பெரும்பாலும் பாதிக்கப்படுகின்றன.இந்நோயிலிருந்து ஆடுகளை பாதுகாக்க சூரிய உதயத்திற்குப் பின் ஆடுகளை 1 மணி நேரம் கழித்து மேய்ச்சலுக்கு அனுப்ப வேண்டும். பருவமழைக்கு முன் தடுப்பூசி போடுதல் அவசியம்.
- ✓ தற்போது நிலவும் பருவநிலையில் எலுமிச்சை பயிரைத் தாக்கும் சொறி நோய் பரவலாக தென்படுகின்றது. சொறி நோயினை ஏற்படுத்தும் பாக்டீரியா இலைத்துளைகள் மூலமாகவோ பூச்சி மற்றும் காற்றில் அசையும் முட்களினால் ஏற்படும் காயங்கள் மூலமாக தாவரத்திற்குள் நுழைகிறது. இதனைக் கட்டுப்படுத்த பழத்தோட்டங்களில் நோயுற்ற மரங்களில் நோயுற்ற சிறுக் குச்சிகளை வெட்டிய பின் 1 சதப் போர்டோக் கலவையை அல்லது 0.25 சதம் தாமிர ஆக்ஸிகுளோரைடு மருந்தை தெளிக்க வேண்டும்.

**4. மலைப்பிரதேச மண்டலம்**

வரும் நாட்களில் மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 19°செ முதல் 21°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 11°செ முதல் 12°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 80 முதல் 90 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 3-4 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ நீலகிரி மாவட்டத்தில், அடுத்த ஐந்து நாட்களுக்கு மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது.
- ✓ நீலகிரி மாவட்டத்தில் மழை நாட்களில், தண்ணீர் தேங்குவதை தடுக்க தோட்டத்தில் உரிய வடிகால் வசதி செய்ய வேண்டும்.
- ✓ வானம் மேகமூட்டமாக இருப்பதால், மலை காய்கறி பயிர்களில் பூஞ்சான் தாக்குதல் பரவுவதற்கான வாய்ப்புகள் உள்ளது.
- ✓ வானம் மேகமூட்டமாக இருப்பதால், தேயிலை செடியில் கொப்பள நோய் பரவுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளது. இதை கட்டுப்படுத்த, ஒரு ஏக்கருக்கு புரோபிகோனசோல் 80 மில்லி ரூ காப்பர் ஆக்ஸிகுளோரைடு 84 கிராம் இலை வழியாக தெளிக்கலாம்.
- ✓ மழை நாட்களில், தண்ணீர் தேங்குவதை தடுக்க தோட்டத்தில் உரிய வடிகால் வசதி செய்ய வேண்டும். இஞ்சி பயிரில் கிழங்கு அழுகலை தவிர்க்க, காப்பர் ஆக்ஸிகுளோரைடு 2.5 கிராம்/லிட்டர் அல்லது சூடோமோனஸ் 2 கிராம்/லிட்டர் தண்ணீர் கலந்து ஊற்றவும்
- ✓ பூண்டு பயிருக்கு அமோனியம் சல்பேட் 365 கிலோ இரண்டு தவணைகளாகவும், சூப்பர்பாஸ்பேட் 250 கிலோ, பொட்டாஷ் 65 கிலோ உரங்களாக இடலாம்.

**5. வடமேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் தென்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது . பகல்நேர வெப்பநிலை 34°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 45 முதல் 85 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 3 கி.மீ வேகத்திலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ தென்மேற்கு பருவமழையின் தாக்கம் தமிழகத்தின் மேல் தொடர்ந்து காணப்படும். இதன் காரணமாக மேகமூட்டமும் லேசான மழையும் காணப்படும். பகல் மற்றும் இரவு வெப்ப அளவுகள் குறைந்து காணப்படும். ஈரப்பதம் அதிகரித்து காணப்படும் என்பதால் தீவன மூலப்பொருட்களின் சேமிப்பிலும், அதன் உபயோகத்திலும் மிகுந்த கவனம் கொண்டு செயல்படவேண்டும். எக்காரணத்தினாலும், பூஞ்சை நச்சு தீவனத்தில் அதிகமாகிவிடாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். பூஞ்சை நச்சு முறிவு மருந்துகளையும், கல்லீரல் ஊக்க மருந்துகளையும் தீவனத்தில் சேர்க்கவேண்டும்.
- ✓ தற்போது பரவலாக மழை பெய்துள்ளதால் விவசாயிகள் சோளம், சிறுதானியங்கள், பாசிப்பய, உளுந்து மற்றும் துவரை போன்ற பயிர் இரகங்களை தற்போது உள்ள ஈரப்பதத்தைப் பயன்படுத்தி விதைப்பு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், முன்கூட்டியே விதைப்பு செய்துள்ள விவசாயிகள் தற்போது உள்ள ஈரப்பதத்தை பயன்படுத்தி களை மேலாண்மையை மேற்கொள்ளவேண்டும்.

**6. வடகிழக்கு மண்டலம்**

அடுத்து வரும் ஐந்து நாட்களிலும் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 33°செ முதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 24°செ முதல் 28°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 60 முதல் 85 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 2 முதல் 12 கி.மீ வேகத்திலும் வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- ✓ அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது.
- ✓ கால்நடைகளை ஏரி மற்றும் குளங்களில் உள்ள புதியதாக முளைத்த புற்களை மேயாமல் பார்த்துக்கொள்வதன் மூலம் தட்டைப் புழுக்களின் தாக்கத்தினை கட்டுப்படுத்தலாம்.
- ✓ உழவர்கள் தங்களுடைய கறவை மாடுகளின் மடியை நன்றாக கழுவி மற்றும் உலர்த்தி பால் கறக்கவும். மேலும் பால் கறந்த பின்பு தூசி அதிகமுள்ள உலர்தீவனம் அளிப்பதை தவிர்ப்பதன் மூலம் மடிவீக்க நோய் தாக்கத்திலிருந்து பாதுகாக்கலாம்.
- ✓ ஆட்டு கொட்டகையின் தரையை 3 அல்லது 4 அங்குல அளவு மண்ணை மாற்றுவதன் மூலம் நோய் தாக்குதலிருந்து பாதுகாக்கலாம்.
- ✓ செம்மறி ஆடுமற்றும் வெள்ளாடுகளுக்கு கால்நடைமருத்துவரின் பரிந்துரைப்படி குடற்புழு நீக்க மருந்தினை அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- ✓ புறக்கடை கோழி வளர்ப்போர் கோழிகளுக்கு வெள்ளை கழிச்சல் நோய் (இராணிகட்) தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும்.
- ✓ நெல்லில் பாக்டீரியா இலைக்கருகல் நோயைக் கட்டுப்படுத்த லிட்டருக்கு காப்பர் ஹைட்ராக்ஸைடு 77WP 2.5 கிராம் அல்லது பசுஞ்சான கரைசல் 20 சதவிகிதம் அல்லது வேப்பங்கொட்டைச் சாறு கரைசல் 5 சதவிகிதம் பயன்படுத்தவும்.

**7.அதிக மழை பெறும் மண்டலம்**

வரும் நாட்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 30°செ முதல் 31°செ ஆகவும் இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 24°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 75 முதல் 90 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது காற்றின் வேகம் மணிக்கு 15-20 கி.மீ. வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ வரும் நாட்களில் 60 மி.மீ அளவு மழை பெய்ய வாய்ப்புள்ளது.
- ✓ வரும் நாட்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளதால் தென்னை மற்றும் பழவகை மரங்கள் மற்றும் மரவாசனை பயிர்களை சுற்றி வட்டப் பாத்திகள் அமைத்து மழை நீரை சேமிக்கவும்.

- ✓ மழை இருப்பதால் பாலித்தீன் கவர் (2%) பயன்படுத்தி வாழைத் தார்களை பொதிவதன் மூலம் வாழைத் தார்களின் தரத்தை மேம்படுத்தலாம்.
- ✓ ரப்பர் : பாலித்தீன் ரைன் கார்ட்-ஐ மரத்தில் பால் வடியும் பகுதியில் மேல் பொருத்தவும். இதனால் மழைக் காலங்களில் பால் வெட்டலாம்.
- ✓ காற்றின் வேகம்(15 – 20 கி.மீ /மணி) தென்மேற்கு திசையிலிருந்து வீசுவதால் இளம் இரப்பர் மற்றும் வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.
- ✓ காற்றின் வேகம் அதிகமாக இருப்பதால் பயிர்களுக்கு மருந்து தெளிப்பதை தவிர்க்கவும்.

**பேராசிரியர் மற்றும்**
**தலைவர்**
**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்**
**த.நா.வே.ப.கழகம்,கோவை**